# ஈரோடு மாநகராட்சி

# மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 பங்குனித் திங்கள் 16-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி (29.03.2012) வியாழக் கிழமை பகல் 12.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

\- - -

### கூட்டப் நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி சாலை புதிய வணிக வளாக கடைகளுக்கு ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டுகளுக்கு 06.03.2012-ம் தேதி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்காணும் கடைகளுக்கு மட்டும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி உச்சஏலக் கேள்வி கோரியுள்ளனர்.

| வ. எண். | உச்ச ஏலக்கேள்வி கோரியவரின் பெயர் திருவாளர்கள். | கடை எண். | உச்ச ஏலக்கேள்வி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்துள்ள அரசாங்க மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | பி. மீனாட்சி | 7 | 11550- | 8871- |
| 2. | ஏ. இஸ்மாயில்கான் | 8 | 9700- | 8871- |
| 3. | ஆர். ராஜாகுமார் | 9 | 11600- | 10680- |
| 4. | பி. மீனாட்சி | 12 | 12100- | 10613- |
| 5. | இ. சம்பத்குமார் | 15 | 8900- | 6069- |
| 6. | ஏ. வெங்கடேஷ் | 16 | 6500- | 6313- |
| 7. | ஏ. செந்தில்குமார் | 19 | 6900- | 6819- |
| 8. | சி. சேகர் | 24 | 5050- | 4888- |
| 9. | சி. சேகர் | 26 | 5300- | 5201- |
| 10. | சி. சேகர் | 27 | 4700- | 4304- |

மேற்காணும் கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிக்காக எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளனர். மேற்படி ஏலக் கேள்விகளானது மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள அரசாங்க மதிப்பை விட கூடுதலாக உள்ளது.

மேற்படி கடைகளுக்கு பலமுறை ஏலம் விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஏற்படும் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடை எண். 7, 8, 9, 12, 15, 16, 19, 24, 26 மற்றும் 27 ஆகியவற்றிற்கு கோரியுள்ள உச்சஏலக் கேள்வித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள அரசாங்க மதிப்பை விட கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அ2/4834/06**

**389. அனுமதி வழங்கப்பட்டது. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**2.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2012-2013 முதல் 2014-2015 முடிய உள்ள காலங்களுக்கு 06.03.2012-ம்

தேதி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்காணும் இனங்களுக்கு மட்டும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி உச்சஏலக் கேள்வி கோரியும், ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | உச்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் திருவாளர்கள். | ஏல இனம் | ஒப்பந்தப்-புள்ளி ரூ. | உச்ச ஏலக் கேள்வி ரூ. | சென்ற ஆண்டு தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | எஸ். முஸ்தபா | பேருந்து நிலையம் 2-ம் பிளாட்பாரத்தில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.2) | 182500- | - | 172930- | 164826- |
| 2. | ஏ. பாலாஜி | பி.பெ. அக்ரஹாரத்தில் மீன்கடை நடத்திக் கொள்ளும் உரிமம் | 73999- | - | 70560- | 67253- |
| 3. | தியானேஸ்வரன் | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட கவுண்டச்சிபாளையம் மற்றும் தலைமை நீரேற்று நிலைய தென்னை மரம் பலன்தரும் மரங்கள் | - | 55900- | 7828- | 7461- |
| 4. | சி. ஆறுமுகம் | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட முத்தம்பாளையம் மற்றும் திண்டல் அருகில் உள்ள மீன் குட்டைகளில் மீன் பிடித்தல் | - | 15600- | 14130- | - |
| 5. | தியானேஸ்வரன் | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட ஒண்டிக்காரன் பாளையம் மற்றும் வில்லரசம்பட்டி பள்ளி மற்றும் சானார்பாளையம் மந்தையில் தென்னை மரம் பலன்தரும் மரங்கள் | - | 6500- | 4631- | 4413- |
| 6. | எம். ஆறுமுகம் | காவேரி ரோட்டிலுள்ள (நேதாஜி மார்க்கெட்) கட்டணக் கழிப்பிடம் | - | 121000- | 116550- | 109217- |

மேற்காணும் வ.எண். 1, 2 ஆகியவற்றிற்கு ஏல வைப்புத் தொகை செலுத்த எவரும் முன் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சென்ற ஆண்டு தொகையை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாகும்.

மேலும் வ.எண். 3, 4, 5 மற்றும் 6 ஆகியவற்றிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர வைப்புத் தொகை செலுத்த எவரும் முன் வரவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளனர். மேற்படி ஏலக் கேள்வியானது சென்ற ஆண்டு தொகையை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாகும்.

எனவே மேற்படி இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மற்றும் உச்ச ஏலக் கேள்வியும் சென்ற ஆண்டு தொகையை விடவும் மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அ1/13600/09**

**390. அனுமதி வழங்கப்பட்டது. வரிசை எண்.2 ரத்து செய்யப்பட்டது. மறு ஏலம் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**3.** தமிழ்நாடு சட்டம் எண். 7/2007, அரசாணை எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 28.11.2007–ன்படி ஈரோடு நகராட்சியினை மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டும், அரசாணை எண், 51, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 17.03.2010–ன்படி ஈரோடு மாநகராட்சியுடன் நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள் (வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், சூரம்பட்டி, காசிபாளையம்) இரண்டு பேரூராட்சிகள் (சூரியம்பாளையம், பிராமண பெரிய அக்ரஹாரம்) ஐந்து ஊராட்சிகள் (திண்டல், கங்காபுரம், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம்) ஆகிய உள்ளாட்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு அரசாணை எண். 5, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 06.01.2011–ன்படியும், அரசு ஆணை (நிலை) எண். 89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 28.06.2011–ன்படியும் 60 வார்டுகளாக ஒருங்கிணைக்கப்பட்டு நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகின்றது. தற்போது நான்கு மண்டலங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசு ஆணை (நிலை) எண். 206, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந6) துறை, நாள். 22.10.2008–ல் ஈரோடு நகராட்சியை 01.01.2008 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அரசு ஆணை (நிலை) எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 26.09.1996–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சி பணி விதிகள் 1996–ன்படி, சில பணியிடங்களை ஒருங்கிணைத்தும், புதிய பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணை (நிலை) எண். 259, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 25.10.2010–ல் ஈரோடு மாநகராட்சியுடன் நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளையும், இரண்டு பேரூராட்சிகளையும், ஐந்து கிராம பஞ்சாயத்துக்களையும் இணைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைகளின்படி ஈரோடு மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட 4 மூன்றாம் நிலை நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 5 ஊராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை மாநகராட்சி பணியிடங்களாக ஈர்த்துக் கொள்ளவும், அப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளவர்களை தவிர்த்து மாநகராட்சிப் பணிக்கு வர விருப்பம் தெரிவித்த பணியாளர்களை இணைப்பில் கண்டுள்ளபடி மாநகராட்சி பணி விதிகளின் கீழ் கல்வித் தகுதிக்கு விலக்களித்து ஈர்த்துக் கொள்ளவும், ஒரு சில பணியிடங்களின் பதவி பெயர்களை மாநகராட்சிப் பணி விதிகளில் உள்ளது போல் பெயர் மாற்றம் செய்யவும் அரசின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு-

ஈரோடு மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட 4 மூன்றாம் நிலை நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 5 ஊராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை மாநகராட்சிப் பணியிடங்களாக ஈர்த்துக் கொள்ளவும், அப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளவர்களை தவிர்த்து மாநகராட்சிப் பணிக்கு வர விருப்பம் தெரிவித்த பணியாளர்களை இணைப்பில் கண்டுள்ளபடி மாநகராட்சிப் பணி விதிகளின் கீழ் கல்வித் தகுதிக்கு விலக்களித்து ஈர்த்துக் கொள்ளவும், ஒரு சில பணியிடங்களின் பதவிப் பெயர்களை மாநகராட்சிப் பணி விதிகளில் உள்ளது போல் பெயர் மாற்றம் செய்யவும் அரசின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**சி1/8781/11**

**391. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2012-2013 முதல் 2014-2015 முடிய உள்ள காலங்களுக்கு 22.03.2012-ம் தேதி பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்காணும் இனங்களுக்கு மட்டும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி உச்சஏலக் கேள்வி கோரியுள்ளனர்.

| வ. எண். | உச்ச ஏலக்கேள்வி கோரியவரின் பெயர் திருவாளர்கள். | ஏல இனம் | உச்ச ஏலக் கேள்வி ரூ. | சென்ற ஆண்டு தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | கே. கோபால-கிருஷ்ணன் | மண்டலம்-1 வீரப்பன்சத்திரம் பகுதிக்குட்பட்ட சாலை ஓர தினசரி மார்க்கெட் | 199000- | 189079- | 180218- |
| 2. | எஸ். இராமலிங்கம் | மண்டலம்-2 பெரியசேமூர் பகுதிக்குட்பட்ட சாலை ஓர தினசரி மார்க்கெட் | 109600- | 103856- | 98989- |
| 3. | எஸ். இராமலிங்கம் | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட சாலை ஓர தினசரி மார்க்கெட் | 112500- | 106943- | 101931- |

மேற்காணும் வ.எண். 1, 2 மற்றும் 3 ஆகியவற்றிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர ஒருவரும் வைப்புத் தொகை செலுத்த முன் வரவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளனர். மேற்படி ஏலக் கேள்வியானது சென்ற ஆண்டு தொகையை விடவும், மூன்றாண்டு சராசரி தொகையை விடவும் கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அ1/13600/2009**

**392. அனுமதி வழங்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**5.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2012-2013 முதல் 2014-2015 முடிய உள்ள காலங்களுக்கு 22.03.2012-ம் தேதி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் சூரம்பட்டி பகுதி 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர வைப்புத் தொகை செலுத்த எவரும் முன்வரவில்லை. பொது ஏலத்தில் திரு. எஸ். சின்னதுரை என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வி ரூ.2,04,000/- ஆகும். இத்தொகை சென்றாண்டு தொகை ரூ.1,87,425/-ஐ விடவும், மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,78,642/-ஐ விடவும் கூடுதலாக உள்ளது. எனவே இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அ1/13600/2009**

393. **அனுமதி வழங்கப்பட்டது**.

**6.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஈரோடு பகுதி 2, 3, 4, 5 மற்றும் வீரப்பன்சத்திரம் பகுதி 8 அடங்கிய சிப்பம்-2க்கு பாதாள சாக்கடைத்திட்டம் அமைக்க ரூ.54.75 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 19.01.11ல் நான்காம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் எல்-2 நிலையில் இருந்த திருவாளர் ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன் பி.லிட்., ராமராவ் ஜே.வி ஹைதராபாத் நிறுவனத்தார் ஒப்பந்தப்புள்ளி விகிதம் (+) 13.09% க்கு செய்து தர சம்மதித்துள்ளதை மாமன்றம் தனது தீர்மான எண்.278 நாள் 09.02.12ல் அங்கீகரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.03.12ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு கூட்டத்தில் திருவாளர் ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன் பி.லிட்., ராமராவ் ஜே.வி ஹைதராபாத் நிறுவனத்தார் குறைத்து வழங்கிய ஒப்பந்தப்புள்ளி ரூ.52.00 கோடியை (2008-09ம் ஆண்டின் நிர்வாக மதிப்பீட்டை விட 13.09 சதவீதம் அதிகம் 2011-2012ம் ஆண்டின் (SOR) மதிப்பீட்டை விட 3.21 சதவீதம் குறைவை) ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவின் பரிந்துரையை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் ஏற்கலாம்

**பா.சா.தி/7587/10**

394. **ஏற்றுக்கொள்ளப்பட்டது**.

# இடம்- ஈரோடு மேயர்,
# நாள்- 02.04.2012 ஈரோடு மாநகராட்சி